1525

REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.

[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணா

மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணா 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்கிரம-ஹு ஆவணி-மீ 28உ 1940-ஹு செப்டம்பர்-மீ உ 12 | ஸ-36

இந்தியா மந்திரியின் "இல்லை" பதில்

பிரிடிஷ் பார்லிமெண்டில் 5உ யன்று ஒரு மெம்பர் இந்திய நிலைமையைப் பற்றி இந்தியா மந்திரியைச் சில கேள்விகள் கேட்டார்.

வைஸ்ராய் அறிக்கையை காங்கிரஸ் நிராகரித்து விட்டதாயும், முஸ்லீம் லீக் வைஸ்ராய் அறிக்கையை அங்கீகரித்து ஒத்துழைக்கத்தீர்மானித்திருப்பதாயும் இந்தியா மந்திரி பதில் சொன்னார்.

காங்கிரஸ் மஹா ஸபையே பெரிய செல்வாக்குள்ளதாகையால் அதை திருப்தி செய்யும் வழியில் இந்தியா மந்திரி ஏதாவது புதிய முயற்சி செய்வாரா என்று மறுபடியும் கேட்கப்பட்டது. இதற்கு "அந்த மாதிரி செய்ய முடியாது" என்று இந்தியா மந்திரி பதில் கூறினார்.

வைஸ்ராயின் தவறு

ஹிந்துக்களுக்கு அபயமில்லையா?

காராச்சியில் அராஜக நிலைமை ஏற்பட்டு அங்குள்ள ஹிந்துக்களின், உயிர், பொருள் முதலியவைகளுக்கு பெருத்த சேதம் ஏற்பட்டு வருவதைத்தடுக்க வேண்டி பலமான ஏற்பாடு செய்யும்படி வற்புறுத்த, ஹிந்து ஸமூஹத்தினரின் டெபுடேஷன் ஒன்றை ஏற்கவேணுமென்று காராச்சி ஹிந்துக்கள் வைஸ்ராய் அவர்களைக் கேட்டனர்

அதற்கு வைஸ்ராய் தாம் டெபுடேஷனை ஏற்க முடியாதென்றும், இது மாகாணத்தைப்பொறுத்த விஷயமென்றும் பதில் சொல்லி விட்டாராம்!

ருமேனியாவும்

ஸர்வாதிகாரி நாடாகியது.

ருமேனியாவில், பிரகிருத யுத்தம் காரணமாக ராஜியப்புரட்சி ஏற்பட்டு அதன் அரசர் தமது பதவியை விட்டு விலகினார். அவரது பிள்ளை அரசராக வந்திருக்கிறார். பிரதான மந்திரி யொருவர் மந்திரிஸபை அமைத்து ஸர்வாதிகாரியாக ஆட்சி நடத்துவார்.

விதவைகளையே மணக்கவேணும்

வங்க சட்டஸபையில் மசோதா

ஒரு மெம்பரின் விசித்திர மூளை

வங்காளராஜாங்க ஸபையில் ஒரு ஹிந்து மெம்பர் ஒரு விசித்ரமசோதா கொண்டு வந்திருக்கிறார். தாரமிழந்து இரண்டாவது தாரம் விவாஹம் செய்து கொள்ளுகிறவர் யாவரும் இனிமேல் விதவைகளையே மணக்க வேண்டு மென்று அந்த மசோதா மூலம் நிர்பந்திக்கப்படுமாம். இந்த மசோதாவை பொதுஜன அபிப்பிராயம் அறிவதற்காக பஹிரங்கப்படுத்தும்படி சட்டஸபை தீர்மானித்தது.

வைஸ்ராய் அறிக்கை

முஸ்லீம் லீக் ஏற்றுக்கொண்டது.

கேட்டதெல்லாம் கிடைத்து விட்டதாம்.

அகில இந்திய முஸ்லீம் லீக் கார்யக்கமிட்டி கூடி வைஸ்ராய் அறிக்கையை திருப்தியுடன் அங்கீகரிப்பதாகத் தீர்மானித்தது. முஸ்லீம்களின் அநுமதியின்றி புதியராஜியத் திருத்தம் செய்யக்கூடாதென்றும்' பாகிஸ்தான் திட்டத்தை ஏற்கவேணுமென்றும், முஸ்லீம்களின் உரிமைகள் காக்கப்பட வேணுமென்றும் தாங்கள் கேட்ட எல்லா வரன்களும்' தங்களுக்கு வைஸ்ராய் அறிக்கைமூலம் ஸித்தித்துவிட்டதால் இதை ஆதரித்து பிரிட்டனுடன் ஒத்துழைப்பதாக முடிவு செய்யப்பட்டது.

மீண்டும் காங்கிரஸ் மந்திரிகள்

ஸ்ரீ ஸத்யமூர்த்தி வற்புறுத்துகிறார்.

ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி 4உ யன்று ஓர் முக்ய அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதில் அவர் மீண்டும் மாகாணங்களில் உடனே காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவியை ஏற்று நிர்வாகத்தை நடத்த முன்வர வேண்டுமென்றும், ஏழுமாகாணங்களிலும் இன்னும் சட்டஸபை மெம்பர்கள் அப்படியே இருந்து வருவதால் கவர்ன்மெண்டார் மந்திரி பதவி ஏற்கும் நம்மைத்தடுக்க முடியாதென்றும், அப்படி ஒரு அவஸரச்சட்டம் செய்தாலும்செய்யப்படட்டுமென்றும்,முஸ்லீம் லீக் மந்திரிகளைப்போல் யுத்தத்தில் ஒத்துழையாமை செய்து கொண்டே மந்திரிகள் நிர்வாஹம் நடத்தலாமென்றும் ஸ்ரீ ஸத்யமூர்த்தி சொல்லியுள்ளார்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடும்சமயத்தில் இவ் [illegible] வெளியிட்டிருப்பதில் ஏதோ விசேஷ மிருப்பதாக ராஜிய வாதிகள் நினைக்கிறார்கள்.

மைஸூர் மஹாராஜா பட்டாபிஷேகம்

வைதிக கார்யங்கள் சிறப்பு

புதிய மைஸூர் மஹாராஜாவின் பட்டாபிஷேக வைபவமானது 8உயன்று மைஸூரில் வெகு ஆடம்பரமாக நடைபெற்றது. இந்தியாவில் பல பாகங்களிலிருந்தும் பல பிரமுகர்கள் வந்திருந்தனர். ஸமஸ்தானத்தின் ஜனங்கள் பல்லாயிரக் கணக்காக வந்து கூடியிருந்தனர். அரண்மனையும், முக்ய கட்டிடங்களும் வெகு சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தன.

வைதிக ஹிந்து மத ஸம்பிரதாய விதிப்படி வைதிக கார்யங்கள் வெகு விசேஷமாக நடந்தன. புண்யாஹம், பிரதிஸரம், உதக சாந்தி, ஹோமங்கள் தேவாலய யாத்திரை, ஆசார்ய பூஜை முதலியவைகள் பூர்வாங்கமாக நடந்தன. மூன்று வேதங்களின் பாராயணமும் நடைபெற்றது.

நகரமெங்கும் பெரியகுதூகலமாயிருந்தது. இந்த விசேஷத்தை முன்னிட்டு கைதிகளுக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டது. 150 ராஜீயக் கைதிகள் விடுவிக்கப் பட்டனர்.

வகுப்பு வாதத்தை தீர்க்க வழி யென்ன?

(கே. வாதாசாரியார் பி. எ., பி. எல்.,)

இந்திய இராஜீய நிலைமை சாச்வதமாக சிக்கலாகவே இருந்து வருகிறது. தீராப் போராய் முற்றுமல் தவிர்த்து வருவது இத்தேசத்தலைவர்களின் தேச பக்தியாலேயாகும். இந்தியாதேசம் ஆர்யாவர்த்தம் என்றும் ஹிந்துக்களுக்கே ஏகதேச சொந்தமென்றும், மற்றவகுப்பினர் யாவரும் சிறுபான்மையோருக்குத் தக்க பாத்யதை மட்டில் தான் எதிர்பார்க்கலாமென்றும், ஹிந்து மஹா ஸபா வறுதி இடுகிறது. காங்கிரஸ் மஹா ஸபையோ. Burke, Mill, Rousseou முதலியோரின் கொள்கையைக் கொண்டு பார்லிமென்டரி ஜனநாயக முறையே இந்தியாவுக்கும் ஏற்ற அரசியல் முறையென்றும் வாதிக்கிறது. ஹிந்துக்கள் பெரும்பான்மையோர் என்பதனால் இதர மதஸ்தர்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல் யாது என்று வினவுகிறது. அரசியல் அமைப்புக்கும் மதவிஷயங்களுக்கும் ஸம்பந்தமில்லையென்றும் அவரவர்கள் முறைப்படி அவரவர்கள் மதவிஷயங்களை நடத்திக்கொள்வதில் ஒரு ஆக்ஷேபணையுமில்லையென்றும் சாதிக்கிறது. முஸ்லீம் லீக்கோவென்றால் இந்தியாவில் மதமே அரசியலின் அடிப்படையென்றும் ஹிந்துக்களுடன் முஸல்மான்கள் ஒருபோதும் சேர்ந்து வாழ இயலாதென்றும் தேசத்தை இரண்டாகவோ மூன்றாகவோ பிரித்தே ஆகவேண்டுமென்றும் பிடிவாதம் செய்கிறது.

இவ்வாறாக இம்மூன்று கொள்கைகளும் ஒன்றுக்கொன்று முரண்படுவதாயும், விட்டுக்கொடுத்து வசப்படுத்த யாதொரு வஸதி அளிக்காமலும் இருந்து வருகிறது-ஆகவே ஏதாவது புது முறையில் இப்பிரச்சனையை தீர்க்க முற்பட்டாலொழிய முடியாது. இந்தியபிரச்னை ராஜீயப் பிரச்னை மட்டுமன்று. மதாசார பிரச்னை மட்டுமன்று. பொருளாதார பிரச்னை மட்டுமன்று. இவ்வளவும் சேர்ந்தது, இதர விஷயங்களும் வந்து கலப்பது.

எந்த பிரச்னையை எடுத்துக்கொண்டாலும் மதவிஷயம் அதில்கலக்காமல் இருப்பதில்லை. கட்டாய ஹிந்திப் படிப்போ, இனம் சட்டமோ எதுவானாலும் ஸரி அதில் மதவிஷயமும் இதரமதஸ்தர்களின் அவநம்பிக்கையும் சேர்ந்துகொண்டு உருமாற்றி விடுகிறது. இம்மதவிஷயமானது வழிபாட்டைமட்டில் பற்றியதல்ல, வாழ்கைமுறையே அடிப்படையாகக் கொண்டது. அதை மாற்ற முயற்சிப்பதாக பயம் ஏற்பட்டு விடுகிறது. பிறகு வேறு எந்தமுன்னேற்றமும் செய்ய சாத்தியப்படுவதில்லை. ஒவ்வொரு குடும்பமும் வெளியோர் வந்து தலையிட்டு தங்களை மாற்றிவிட முயல்கிறார்கள் என்று எளிதில் சங்கித்து விடுகிறது.

ஆம்! அது வாஸ்தவமே! இந்தியா, அனேக குடும்பங்கள் கொண்டநாடு ஒவ்வொரு குடும்பமும் தனித்தனியாக தனக்கு ஏற்பட்ட முறையில் வாழ்கையை நடத்தி வருகிறது. அவைகளுக்கு அவ்விஷயங்களில் முழுசுதந்திரமும் அளிக்கப்பட்டால் தான் அவைகள் இதர குடும்பங்களுடன் ஒத்துழைக்க முன்வரும். அவைகளால் ஆனதே இந்தியாதேசம் இத்தகைய சுதந்திரம் பெற்ற குடும்பங்களே இந்தியாவுக்கு சுதந்திரமும் இந்தியாமக்களுக்கு சரிசமான பொருளாதார நிலைமையையும் பெற்று நிலைநிறுத்தவல்லது.

ஆகையால் மாகாண ஸமஷ்டி ஏற்படுவதுபோல் குடும்ப ஸமஷ்டிகள் நிறுவப்படவேண்டும் யாவருக்கும் பொதுவானவைகளான நியாய விசாரணை தேசபாதுகாப்பு வியவஸாயம், வியாபாரம் போக்குவரத்து மார்க்கங்கள்-முதலியன இராஜீய நிர்வாஹத்தின் அதிகாரத்துக்குள்பட்டவைகள். சிற்சிலருக்கே அஸாதரணமாய் இருந்து வருவதான ஆசாரங்கள் தனிச்சட்டதிட்டங்கள், மதஸ்தாபனங்கள் பண்டைகாலம் தொட்டுவரும் பழக்கவழக்கங்கள் பயிற்சி முறைகள் பாஷாபிவிருத்தி, இலக்கியமுறைகள் அவைகளுக்கு ஸாதனமான கல்வித்திட்டங்கள்—இவையாவும் அந்தந்த குடும்பங்களின் ஏகதேச அதிகாரத்துக்குள்பட்டவைகளாகவே நிறுத்தப்படவேண்டும்.

இராஜீய விஷயங்களை மத்ய ஸபைகளும் மாகாண ஸபைகளும் கவனித்துக் கொள்ளட்டும். அர்த்த சாஸ்திர விஷயங்கள் மட்டில் அவைகளின் நோக்கு. ஆகையால் அச்சபைகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்கள் தனித் தொகுதிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய அவச்யமில்லை தனித் தொகுதிகளும் அவச்யமில்லை. கால கிரமத்தில் மறைந்துவிடும்.

ஒவ்வொரு வகுப்புக்களும் தங்களுக்கென்று கொண்ட தர்மங்களை தாங்களே சீர்பார்த்து காத்துக் கொள்ளட்டும் அதற்காக ஒவ்வொரு வகுப்பும் ஓர் 'ச்ரேணியை' guild அமைத்துக் கொள்ள வேண்டும் அதன் மூலம் அவைகள் வளர்ந்து பயனும் பண்பும் பெற ஸாத்யமாகும். இச்ச்ரேணி பிற வகுப்புக்களுக்கு ஒருவித இடையூறோ நஷ்டமோ செய்யாது; தன் வகுப்பைத் தழைத்தோங்கச் செய்யும், தன் தனி முறையில் தன் ஸம்பிரதாயப்படியே அப்படி ஒவ்வொரு ச்ரேணியும் அமைக்கப்பட்டு நடந்து வருவதானால் இந்தியா தேசம் சீறும் சிறப்பும் பொங்கி, மனப்பூர்வமாக ஒன்று பட்டு வாழமுடியும். அப்பொழுது ஒரு வகுப்பின் பாத்யதையைக் குலைத்து மற்றொரு வகுப்பு வளர விரும்பாதல்லவா?

தனக்குத் தனித்த தர்மம் ஒன்று உண்டு என்று கொண்ட ஒவ்வொரு வகுப்பும் ஓர் ச்ரேணியில் அடங்கும். தன்வரை முறைகள் அழியாமலும் தன் தனிவளம் குன்றாமலும் ஒவ்வொரு வகுப்பும் பெருகிவரும். கைக்கும் விரல்களுக்கும் உள்ள ஸம்பந்தம்போல் இச் ச்ரேணிகளுக்கும் மாகாண சர்க்கார்களுக்கும் சம்பந்தம் இனிது அமையும்.

இச் ச்ரேணி எவ்வாறு அமைக்கப்படவேண்டும்? அவ் வகுப்பினர் யாவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்டதாக இருக்கலாம், அல்லது ஸந்தர்ப்பத்துக்கு தக்கவாறு திருத்திக் கொள்ளலாம் பஞ்சாப் பிரதேசத்தில் சீக்கியர்கள் இத்தகைய ச்ரேணிகளை அமைத்துக் கொண்ட பிறகு வெகு விரைவில் முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள்.

இச் ச்ரேணி தன் அதிகார வர்கத்தை தானே நியமித்துக் கொள்ளும். அவர்களே நிர்வாஹத்தை கவனிப்பார்கள். தர்ம ஸ்தாபனங்களைப் பாதுகாப்பார்கள். பள்ளிக்கூடங்களில் தங்கள் தர்மத்துக்குத் தக்கவாறு படிப்பை போதிக்க ஏற்பாடு செய்வார்கள் எந்த பாஷையில் கல்வி போதிக்கப்படவேண்டுமென்பதையும் தீர்மானித்துக் கொள்வார்கள். பாஷை மூலமாகவேபயிற்சி, பாஷை மூலமாகவே தர்மம், பாஷை மூலமாகவே ஸ்வஜாதி அபிமானம் உலகில் எங்கும் வளர்கிறது. அன்யர்கள் குறுக்கிட்டு நம் பாஷையை கெடுத்தால் நமது தர்மமும் அப்பொழுதே தொலைந்தது. நம் வளர்ச்சியே நம் பாஷையாகும். ஒன்றுக்கொன்று இணைபிரிக்க முடியாது. இசைக்கப்பட்டவை இவை. இச்ச்ரேணி, தன் தனிச்சட்ட திட்டங்களைத் தானே தயாரித்துக் கொள்ளும். எல்லா வகுப்புக்களுக்கும் பொதுவான கிரிமினல் ரெவின்யூ வியாபாரச் சட்டங்களில் தலையிடாது தன் ஜனங்களை மட்டில் கட்டுப்படுத்தும் தனிவிதிகளையே தான் விதித்துக் கொள்ளும். குருமார்கள் கையில் சிக்குண்டு வளரமுடியாமல் பின்னடையுமென்று பயம்பட வேண்டியதில்லை. புதிய எண்ணங்களும் நோக்கங்களும், பெரும்பாலோர் நன்மைகளை நாடிய திட்டங்களும் தலைப்பட்ட இக்காலத்தில் எவ்வகுப்பும் வளராது வாளாயிருக்க விசையாது. புதிய முறைகளை பழைய பழக்கங்களுடன் எப்படி திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டுமென்பதே அந்தந்த ச்ரேணியின் கவலையாகும்'

ஒரே வகுப்பின் அங்கத்தினர்கள், தேசத்தின் பல பிரதேசங்களிலும் அமர்ந்திருக்கலாமல்லவா? அவர்கள் யாவரையும் கட்டுப்படுத்தக் கூடிய சட்டத்திட்டங்களைச் செய்யவேண்டுமானால் அதற்காக தேசிய வகுப்புச் ச்ரேணிகள் அமைக்கப்படவேண்டும். சாரதாசட்டத்தைப் போன்ற சீர்திருத்தச் சட்டங்களை அச்ச்ரேணியே பார்த்து அமைக்க வேண்டுமே அல்லது அன்யர்கள் ஓர் வகுப்பினருக்கு வறுதி இடுவது கூடாது.

இராஜீய நிர்வாஹத்தில் தனித்தொகுதிகள் வேண்டாமென்றோம் ஆயினும் ஒவ்வொரு வகுப்பும் அரசாங்க அதிகார சபைகளில் கலந்து கொள்ளவேண்டியதே. அதற்காக மூத்தோர் சபையொன்று அமைத்துக் கொள்ளவேண்டும். மாகாணத்திலும் மத்தியத்திலும் சட்டசபையில் நிறைவேற இருக்கும் ஒவ்வொரு சட்டமும் இச்சபையின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். ஒவ்வொரு ச்ரேணியும் இச்சபைக்கு அங்கத்தினர்களை தேர்ந்தெடுத்து அனுப்பும். அரசாங்கத்துக்கும் ச்ரேணிகளுக்கும் ஏற்படும் அபிப்ராய பேதங்களை ஸம்ஷ்டிக் கோர்ட் தீர்த்து வைக்கும்.

ஒரு ச்ரேணி மற்றொரு ச்ரேணியை நசுக்க வருமபோது மத்ய அரசாங்கத்துக்குள்பட்ட ஸேனை பலம்குன்றியதல்ல. தற்போது இருப்பதுபோல் பஞ்சாப் மாகாணத்திலிருந்து மட்டில் பொறுக்கியெடுக்கப்பட்ட வீரர்கள் கொண்டதாக இருக்காது. 65,000 ஹிந்து வீரர்களும் 35,000 முஸல்மான் வீரர்களும் கொண்டதாக இருக்கும்.

ராஜீய சட்டசபைகளில் கக்ஷிகளும் கக்ஷித்தலைவர்களும் இருந்து வருவார்கள் பெருவாரியாக ஆதரிக்கப்பட்ட கக்ஷியே அரசாங்கத்தை நடத்தும். நிர்வாஹஸ்தர்கள் ஒரு வகுப்பையே சேர்ந்தவர்களாக இல்லாமல் சட்ட சபைகளுக்கு கட்டுப்பட்டவர்களாகவே இருப்பார்கள். பப்ளிக் ஸர்விஸ்கமிஷன்களும் இருந்துவரும். அவ்வகுப்பின் ஜனத்தொகைக்குத் தக்கவாறு உத்யோகங்கள் அளிக்கப்படும்.

இந்திய சுதேச சமஸ்தானங்களுக்கு விசேஷ சலுகைகளைக் கொடுத்து இப்பொழுதே சமஷ்டியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அவச்யமில்லை. காலகிரமத்தில் அவைகளும் இவ்வாறு ச்ரேணிகளை நிர்மாணித்துக்கொண்டு பிறகு வந்துசேரலாம்.

பொருளாதார விஷயங்களைச் சட்டசபைகள் செவ்வனே கவனித்துக்கொள்ளும

(தொடர்ச்சி 3 பக்கம் பார்க்க.)

ஸ்ரீ ராமர் அஸத்யம் சொல்லத் தூண்டவில்லை

(எஸ். ஜி. கிருஷ்ணய்யர் திருச்சி.)

ஸ்ரீ ராமன் தேரில் ஏறிக்கொண்டு அயோத்தியிலிருந்து காட்டுக்கு போகும் போது ஸ்ரீ தசரதர் முதலான சகல அயோத்தி ஜனங்களும் பின்தொடர்ந்து சென்றார்கள். ஸ்ரீ தசரதர், ரதத்தை ஓட்டிக்கொண்டு போகும் சுமந்திரரைக்கூவி, ரதத்தை நிறுத்தும்படி ஆக்ஞாபனம் செய்ய, ஸ்ரீ ராமன் அதைக்கேட்டு சுமந்தரரை நிறுத்தாதே ஓட்டு என்று ஆக்ஞாபனம் செய்தார். அக்காலத்தில் சுமந்திரர் ஸ்ரீராமனைப் பார்த்து என் அய்யா, என்கதி சக்ரத்தில் அகப்பட்டுக்கொண்ட துரும்பு போல் ஆயிற்றே, நான் என்ன செய்வது என்றுகேட்க அப்பொழுது ஸ்ரீராமன் அடியிற்கண்ட மொழிகளைச்சொல்லுகிறார்.

नाश्रौषमिति राजानमुपालब्धोऽपि वक्ष्यसि ।
चिरं दुःखस्य पापिष्ठं इति रामस्तत्रवीत् ॥

உரை:—

रामः=ஸ்ரீராமன் तम्=சுமந்தாரைப் பார்த்து अब्रवीत्=சொன்னார். என்ன சொன்னார்? राजानम्=தசரதரிடம். उपालब्धोऽपि=(அவரால்) நீர் கோபிக்கப்பட்டால் (ஏன் நிறுத்தவில்லை என்று) नाश्रौषमिति=(நான்) ராமன் கேட்கவில்லையென்று (நிறுத்த சம்மதிக்கவில்லை யென்று) वक्ष्यसि = சொல்லுவீராக.

அதாவது ராமன் நிறுத்தசம்மதிக்கவில்லை ஆகையால் சாரதியாய் விளங்கும் நான், ரதியாய் விளங்கும் ஸ்ரீராமன் ஆக்ஞையை பரிபாலனம் செய்ய கடமையாதலால் ரதத்தை நிறுத்தவில்லையென்று சுமந்திரர் தன் கடமையை உரைத்து, ராஜாவின் கோபத்தை தணித்துக்கொள்ளட்டும் என்று தான் பொறுப்பு எடுத்துக்கொண்டு, "ரதத்தை நிறுத்தாதே, ராஜாவினால் கோபித்துக்கொள்ளப்பட்டால் நான் (இராமன்) ரதத்தை நிறுத்த சம்மதிக்கவில்லையென்று நீர் பதில் சொல்லிவிடும்" என்று ஸ்ரீ ராமன் சுமந்தரருக்கு பதில் கூறுகிறார்.

ஏன் ஸ்ரீ ராமன் இம்மாதிரி பிதாவின் ஆக்ஞையை மீறிப்பேசினார் என்றால் பிதாவின் வாக்யத்தை பரிபாலனம் செய்யவே தானாகையால் தோஷமில்லாததோடு கூட ஸ்ரீ தசரதருக்கு, பிராமண சாபத்தால் ஏற்பட்டிருக்கிற மரணாந்த புத்திர சோகத்தில் அதிக நேரம் அனுபவிக்க விடாமல், குறைக்கும் பொருட்டு, ஸ்ரீ ராமன் சங்கல்பித்ததால், பித்ரு வாத்ஸல்யம் என்ற பித்ரு பக்தியையும்மேலிட்டு காட்டியிருக்கும் விஷயம் ஷை ச்லோகத்தின் உத்தரார்த்தத்தினால் நன்கு விளங்குகிறது.

இப்பொழுது மேல்கூறிய சுலோகத்தினால் ஸ்ரீ ராமன் பொய் சொன்னாரா? பொய் சொல்லச் சொன்னாரா? சில சந்தர்ப்பங்களில் பொய் சொல்வது தர்மம்' என்று மனுவானவர் கூறியதை இந்த ரதம் ஓட்டும் விஷயத்தில் இராமன் சொன்னதாகவோ, அல்லது சொல்லச் சொன்னதாகவோ கல்பிக்கப்படும் பொய்-தர்மமான பொய்-ஸ்ரீ ராமன் சொல்லியிருகிறார். ஆதலால் பொய்யாகாது. இது தான் மனுவில் கூறிய தர்மப் பொய்களுக்கு சிலவற்றின் லக்ஷணம். இந்த மாதிரி கஷ்டமான சூக்ஷ்மங்களை வெளிப்படுத்தத் தான் இராமாயணமும், ஸ்ரீ ராமாவதாரமும் ஏற்பட்டிருக்கிறது" என்று கூறுகின்றனர். रामो विग्रहवान् धर्मः ராமாயணத்தின் மூலம் ஸ்ரீ ராமன் தர்ம சூக்ஷ்மங்களை தான் நடத்தி காட்டினாரே தவிர, அதர்ம சூக்ஷ்மங்களை தன் நடையில் காட்டவில்லை. இராமாயணத்தில் ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களுடன் அநேக நடிகர்கள் காணப்படுகிறார்கள். அவர் அவர் மூல்யமாய் அதர்ம லக்ஷணமும் தமக்கு வால்மீகி உபதேசிக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

ஸ்ரீ ராமன், 'தர்மம்' தர்மம் என்ற பதார்த்தத்தால் செய்யப்பட்ட விக்ரஹம் அது ஆடினால் தர்மம் தான் வெளியாகும் வெல்லப்பிள்ளை யாரை அசைத்தால் மெல்லம் உதிரும். உப்பு உதிராது. अनृतं नोक्तपूर्वं என்று ஸ்ரீ ராமனே தன்னைப் பற்றி கூறியிருக்கிறார். நமது வித்வத் கோஷ்டியில் இராமாயண (வால்மீகி) ரீதியாய் ஸ்ரீ ராமன் நடித்த தர்ம நாடக சந்தர்ப்பங்களில் ஏதோ சில அதர்மங்களை ஆரோபணம் செய்கிறார்கள். பிறகு ஸ்ரீ ராமனிடம் அதர்மம் இருக்க விடப்படாது. என்று வித்வான்கள் சிரமப்பட்டு இதர க்ரந்தங்கள் மனு தர்ம சாஸ்திரம் ச்ருதி இத்யாதிகளைக்கொண்டு அதர்மத்தை தர்மமாக்கி ஸ்ரீ ராமனிடம் சமர்ப்பிக்கிறார்கள். இந்த சிரமம் எதற்காகவோ தெரியவில்லை. ஸ்ரீ ராகவனை உத்தேசித்து எது சமர்ப்பித்தாலும் தகும். ஸ்ரீ ராமன் ஏழை, கருணை மூர்த்தி, சரணாகத வத்ஸலன், பக்த பராதீனன். ஆனால் நம்மிடம் பக்தி இருக்க வேண்டும் பக்தியினால் பரவசனாகி எது சமர்ப்பித்தாலும் ஏற்றுக்கொள்வார். நமக்கு அனுக்ரஹம் தீர்மானமாய் கிடைக்கும் ஆனால் அஹம்பாவத்துடன் சமர்ப்பித்தால் எது எம்மட்டில் சமர்பிக்கப்படுகிறதோ அதுவே தான் நமக்கு கிடைக்கும். ஆகையால் இன்று முதலாவது நாம் ராமரயணத்தை ஆராய்ச்சி செய்யும் காலத்தில், ராமன் தர்மமூர்த்தி, தர்மத்தை உலகம் தெரிந்து கொள்ள சாமார்த்தியமில்லை. ஏனென்றால் அதர்மம் ஆசரணையில் சுலபமாய் வந்து விடும், தர்மம் நடத்திக்காட்டுவது தான் ச்ரமம் இதற்காகவே பிரபு ஸ்ரீராமன் அவதாரம் செய்தார். தர்மத்தை நடத்திக் காட்டினார் என்று நாம் அறியவேண்டும் அவர் நடத்தையில் தர்ம சந்தேகலேசமும் இருக்க முடியாது. இந்த ரகசியத்தை ராமனைப் பெற்ற கௌஸல்யா தேவி வெளியிட்டிருக்கிறாள். அதாவது

यं पालयसि धर्मं त्वं धृत्याच नियमेन च ।
स वै राघवशार्दूल धर्मस्त्वामभिरक्षतु ॥

முடிவுரை

ஸ்ரீராமன் பொய் சொல்லவும் இல்லை. பொய் சொல்லச் சொல்லவும் இல்லை. தகப்பனார் வார்த்தையை மீறி நடக்கவும் இல்லை அதர்மமாகவோ, அதர்மம் போல் தோன்றும்படியாகவோ, யாதொரு விதமான காரியங்களும் ஸ்ரீராமன் செய்ய வில்லை.

(2ம் பக்கம் தொடர்ச்சி)

இது வரையில் வகுப்புப் பிரச்னைகளை அவைகளுடன் கூட்டிக் குழப்புவதால் அவநம்பிக்கையும் அச்ரத்தையும் தலையெடுத்து விளங்கியது. வகுப்பு பிரச்னையை தனியாக ச்ரேணிகளிடமும் மூத்தோர் சபையினிடமும் ஒப்புவித்து விடுவதால், தேச பக்தியும் தந்நலமும் சேர்ந்து பொருளாதார நிலைமையை பழுதுன்றி பாதுகாக்கும்.

ஆகவே இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வகுப்பும் தன்தனி தர்மத்தைக் கைவிடாது வீறுபெற்று வளர்ந்து, பிறவகுப்புக்களுடன் போட்டியும் இடாது, இடையூறும் அடையாது, ஒவ்வொன்றும் இந்தியாவின் பொது நன்மைக்குக் குந்தகமன்றியில் செழித்தோங்கி, ஸம உரிமை அடைந்து ஒத்துழைத்து ஒருதேசமாகும்.

From :— Oxford Pamplets— "Communal Harmony"—

திராவிடரும் மஹம்மதியரும் ஒரே வம்சமா?

திராவிடர் ஹிந்து வல்லவா?

ஜஸ்டிஸ் கக்ஷியின் விபரீதப் போக்கு!

டாக்டர் நாயுடு கண்டனம்

திருவாரூரில் நடந்த ஜஸ்டிஸ்கக்ஷிக் கூட்டத்தில் அதன் தலைவர் ராமஸாமி நாயகர் பேசியுள்ள விபரீதக்கூற்றுகளைக் கண்டித்து டாக்டர் வரதராஜுலு நாயுடு ஒரு கண்டன அறிக்கையைப் பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கிறார். அதன் ஸாரமாவது:—

"திருவாரூர் கூட்டத்தில் ராமஸாமி நாயகர் பேசியிருப்பதில், முஸ்லீம்களும் பிராம்மணரல்லாத திராவிடர்களும் ஒரே வம்சத்தினரென்றும், மத விஷயத்தில் இருவகுப்புக்கும் வித்யாஸமில்லை யென்றும், கிறிஸ்தவர்களும் ஆதி திராவிடர்களும் நெருங்கியவர்களென்றும்,

திராவிடர்கள் ஹிந்துக்களல்லவென்றும், ஹிந்து மத மென்பது ஆரியமதமாகையால் திராவிடர்களுக்கு அதில் ஸம்பந்த மில்லை யென்றும், ஆகையால் ஒரே வம்சத்தினராகிய, திராவிடர், முஸ்லீம்கள், கிறிஸ்தவர் ஆகிய மூன்றுவகுப்பாரும் சேர்ந்து ஹிந்து மதத்தை எதிர்க்க வேணுமென்றும் ராமஸாமி நாயக்கர் பேசியிருக்கிறார்.

ராவணன் காலம் முதற் கொண்டும் அவுரங்கஸிப் காலம் முதலாகவும் இந்த நாயகர் காலம் வரையில் ஹிந்து மதத்தின் மீது எவ்வளவோ அலைகள்மோதியிருக்கின்றன. நாயகர் வேண்டு மென்றே ஒரு பெரிய ஸமூஹத்தை அவமானப்படுத்துகிறார்

ஹிந்துக்களுக்கு விரோதமாக மஹம்மதியர்களுடன் சேர்ந்து கொண்டிருக்கிறார். ஆகவே அவரை எதிர்க்க வேண்டியது அவச்யமாகிறது. பிராம்மண—பிரம்மணரல்லாதார் யுத்தமானது இப்போது ஆர்ய—திராவிட யுத்தமாக மாற்றப்பட்டிருக்கிறது. இதற்கு சரித்திரத்தில் ஆதாரமேகிடையாது.

ஹிந்துக்களின் அழிவைத் தேடுவதற்காகவே இது ஏற்பட்டிருக்கிறது. ஹிந்துக்களையும் அவர்களது கலையையும் திட்டுவது அநியாயம். ஹிந்துக்கள் இதை ஸஹிக்கமுடியாது. பிரிடிஷ் கவர்ன்மெண்டாரும் ஹிந்து எதிர்ப்புவேலைகளை ஒடுக்கவேண்டும். ஹிந்துஸ்தானத்தை பிரிக்க முடியாது இவர்களுடைய அறை கூவலை ஹிந்து மஹாஸபை ஏற்று பதில் கொடுக்கத் தயாராயிருக்கிறது.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-ஹூ ஆவணி-மீ 28உ

நிர்ப்பந்தம் செய்வதே காங்கிரஸ் கொள்கையா?

இந்தியர்களை அன்னிய ஆக்ஷியிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் மீட்டு ஸ்வதந்திரர்களாக வாழச் செய்யவே காங்கிரஸ் பாடு படுவதாகப் பகட்டுவார்த்தையே பேசப்படுகிறது. காங்கிரஸ்காரர்களோ, காங்கிரஸ் ஸ்தாபனமோ கொண்டுள்ள கொள்கையும், செய்துவரும் கார்யங்களும் நன்கு கவனிக்கப்பட்டால் ஒவ்வொன்றும் பொது ஜனங்களை நிர்ப்பந்திக்கும் தன்மை வாய்ந்ததாயும், மனித ஸ்வாதந்தரியத்தைப் பறிக்கும் அபாயம் பொருந்தியதாயுமே இருப்பதைப் பல விஷயங்களிலும் கண் கூடாகக்கண்டு வருகிறோம். இதற்கு காங்கிரஸ் மந்திரிகளின் ஆக்ஷி காலத்தில் கணக்கற்ற உதாஹரணங்கள் ஏற்பட்டு வந்தன. காங்கிரஸ் வாதிகளின் ஸ்வதந்திரப் பேச்சானது வெறும் வேஷ மென்பதற்கும் அவர்கள் எதையும் நிர்ப்பந்தத்தாலும், பலாத்காரத்தினாலுமே ஸாதிக்க முற்படக்கூடியவர்களென்பதற்கும் இப்போது மற்றொரு உதாஹரணத்தையும் காணுகிறோம்.

சென்னை மாகாணத்தில் கூட்டுறவு இயக்கத்தைப் பலப்படுத்தி கிராம வாஸிகளுக்கு நன்மை செய்வதற்காக கவர்ன்மெண்டார் ஸர் டி. விஜயராகவாசாரியர் தலைமையில் நியமித்த கமிஷனானது பல மாதங்களாக அங்காங்கு விசாரணை நடத்தி தனது சிபார்சுகளை வெளியிட்டிருக்கிறது. அவைகளிலுள்ள ஸாதகபாதக அம்சங்களை பொது ஜனங்களும், கவர்ன்மெண்டாரும் பரிசீலனை செய்த பிறகே ஏதாவது உத்திரவு பிறப்பிக்கப்படக்கூடும்.

இந்தக்கமிஷனானது காங்கிரஸ் மந்திரி ஆக்ஷி காலத்தில் நியமிக்கப்பட்டபடியால் இதில் சில காங்கிரஸ் வாதிகளும் ஸ்தானம் பெற்றார்கள்: முக்யமாக சென்னையில் பெரிய காங்கிரஸ் தலைவராயும், சட்டஸபைமெம்பராயும், அடிமைத்தன விடுதலைப் போராட்டத்தின் முன்னணியில் விளங்கும் வீரராயுமுள்ள ஸ்ரீமான் கே. பாஷ்யம் அவர்களும் அந்தக்கமிஷனில் ஒரு மெம்பராயிருந்து விபரீதமான சிபார்சு செய்திருக்கிறார்.

கூட்டுறவு இயக்கமானது கிராமவாஸிகளுக்கு நன்மை செய்யக்கூடியதென்பது தீர்மானமாக ஏற்பட்டுவிட்டபிறகு இந்த நன்மையை ஒவ்வொரு கிராம ஜனங்களும் பெறாமல் வீணாகப் போவானேன்? அதற்கு வழியென்னவென்று ஸ்ரீமான் பாஷ்யம் யோஜித்தார். அவருக்கு காங்கிரஸின் நிர்பந்தக் கொள்கை மறந்துபோய் விடுமா? அதையே தமது சிபார்சில் எழுதிவிட்டார். கிராம ஸபைகளில், யோக்யதையுள்ள ஒவ்வொரு கிராம வாஸியும் கட்டாயமாக மெம்பராகச் சேர்ந்து தீரவேண்டுமென்று நிர்ப்பந்தித்து சட்ட மூலமாக விவஸ்தை செய்ய வேணு மென்றும் தமது சிபார்சில் எழுதியிருக்கிறார். ஆனால் மெஜாரிடி மெம்பர்கள் இந்த நிர்ப்பந்த முறையை ஏற்க மறுத்து விட்டனர் கூட்டுறவு இயக்கத்தின் பெயருக்கும், அடிப்படையான கொள்கைக்கும் இந்த நிர்பந்த, முறை அடியோடு முரண்பட்டதென்றும் கிராம ஜனங்கள் தாங்களாகவே விரும்பி இதில் சேருவதே பலம் கொடுக்கக் கூடியதென்றும், நிர்ப்பந்த முறையால் விபரீத பலனே ஏற்படுமென்றும் மெஜாரிடி மெம்பர்கள் கண்டித்து விட்டனர்.

இது எப்படியாயினும் காங்கிரஸின் பலாத்காரக் கொள்கையே இதிலும் காண்பிக்கப்பட்டதையே நாம் குறிப்பிட விரும்பினோம்.

தேசத்தில் ஆசாரம், பழக்க வழக்கம், மனோபாவம் ஆகியவைகளில் கணக்கற்ற பேதம் இருந்து வருகிறது. ஒவ்வொரும் தம் தமது, ஜாதி குல தர்மங்களையும் மனப் பிரவிர்த்தியையும் அனுஸரித்து தாங்களாகவே தங்களது நன்மை தீமைகளை நிர்ணயித்துக்கொள்ள பாத்யமுடையவர்கள். இந்த ஸ்வாதந்திரியம் ஜன ஸமூஹத்திற்கு இன்றியமையாத ஓர் பிரபல உரிமையாகும். இதைப் பறிப்பது எந்த ராஜ தர்ம நீதிக்கும் ஏற்ற தாகாது. இந்த தர்ம நியாயமான கொள்கை காங்கிரஸிடம் சூன்யமாகவே இருக்கிறது.

ராஜீய விஷயத்திலோ, ஸமூஹ, மதாசாராதி விஷயங்களிலோ, காந்தியோ, ஸாதாரண காங்கிரஸ் வாதியோ அல்லது காங்கிரஸ் கூலியாள் ஒருவனோ கூட "இது தான் க்ஷேமம்" என்று கூறும் நிலைமை ஏற்பட்டு விட்டது மிக்க விபரீதமாயிருக்கிறது. காங்கிரஸ்காரர் மனதில் ஏது நியாயமாகப் படுகிறதோ, அதுவே உலகமனைத்துக்கும் க்ஷேமகரமென்று அவர்களே தீர்மானித்து அதைச் சட்ட மூலமாயும், பலாத்கார மூலமாயும் ஜன சமூகத்தின் மீது திணிக்கப் பாடுபடுகிறார்கள். ஜன சமூஹம் அதை விரும்புகிறதா, வெறுக்கிறதாவென்பதைக் கூட அவர்கள் கவனிக்க வேண்டியதில்லை.

பால்யவிவாஹம் கூடாதென்று காங்கிரஸ் பிரஹஸ்பதிகள் தீர்மானித்து விட்டால் போதும். உடனே அதற்குச் சட்டம் வந்து விடுகிறது. சாரதா சட்டம் இந்தக் கொள்கையுடன் தானே ஜனங்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது? தீண்டாமை கூடாதென்று காங்கிரஸ் நினைத்தால் உடனே அதற்குச் சட்ட நிர்பந்தம். ஆலயப்பிரவேசம் வேண்டுமென்று காந்திரி நினைத்தால் போதும். உடனே சட்டம் தான். இம்மாதிரி எவ்வளவோ உண்டு. கிராம ஜனங்கள் கட்டாயமாகக் கூட்டுறவுச் சங்கங்களில் சேராவிட்டால் தண்டிக்கலாமென்று சொல்லும் ஸ்ரீமான் பாஷ்யம், எல்லா ஜனங்களும் கட்டாயமாக காங்கிரஸில் மெம்மர்களாக வேணுமென்றும், இல்லையேல் தண்டனையென்றும் நாளை அதிகாரத்திற்கு வந்தவுடன் சட்டமியற்றலாமல்லவா? காங்கிரஸினால் நன்மை அதிகமென்று தெரிந்தும்கூட ஜனங்கள் அதில் சேராமலிருந்தால் பலாத்காரமாகவாவது அந்த நன்மையை ஜனங்கள் பெறும்படி செய்யவேண்டியது தங்கள் கடமையென்று அவர்கள் வாதிக்கலாமல்லவா?

காங்கிரஸின், ஸ்வாதந்திரியக் கூச்சல், விடுதலைக்கூச்சல் எல்லாம் வேஷமென்றே ஏற்பட்டுவிட்டது. காங்கிரஸ் ஆக்ஷியில் அவர்களிஷ்டப்பட்டதையே ஜனங்கள்மீது பலாத்காரமாக திணிப்பார்கள் ஜனங்களை ஆங்கிலேயர்களின் அடிமைத்தனத்திலிருந்து நீக்கிவிட முயற்சிக்கிறார்களாம். ஆனால் நம்மை காங்கிரஸின் கீழ் அடிமைகளாக்கிக் கொண்டு ஒரு சிறிய கூட்டத்தார் கொட்டம் அடிக்கவே பாடுபடுகிறார்களேயல்லது அவர்கள் உண்மையான ஸ்வதந்திரவாதிகளல்ல வென்பதற்கு இன்னமும் ருஜு வேண்டுமோ?

குறிப்பு.

புலியின் தர்ம புத்தி!

ஒரு புலிக்குத் திடீரென தர்ம புத்தி உதயமாகியது. பசுக்களைக் கொன்று தின்னும். க்ரூர கார்யத்தை நிறுத்திவிடவேணுமென்று நினைத்தது. ஸாத்வீக புத்தி மேலிட்டு உபவாஸ விருதமிருந்தது. ஆனால் உபவாஸத்திற்குப்பிறகு பாரணை செய்யவேண்டியது விதியல்லவா? அதற்காக ஒரு பசுவைக்கொன்று தின்று பாரணையை முடித்துக்கொண்டதாம். க்ரூரஸ்வபாவமுள்ளவருக்கு தர்ம புத்தி தோன்றினால் அது ஸாதுக்களை ஹிம்ஸிப்பதிலேயே வந்து முடியுமென்று சொல்லுவார்கள்.

ஆலயப்பிரவேச அவசரச்சட்ட மந்திரியான ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியார் திருச்செங்கோட்டில் பேசியிருப்பது மேற்படி கதையையே ஞாபகமூட்டுவதாயிருக்கிறது. அங்குள்ள தீண்டாதார் அவருக்கு வாசித்துக்கொடுத்த உபசாரப்பத்திரத்தில், காபி, சாப்பாட்டு ஹோட்டல்களில் தீண்டாதார் பிரவேசிக்கும்படி ஏற்பாடு செய்ய வேணுமென்று ஆலயநாசக ஆசாரியரைக் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு ஸி. ஆர். சொன்ன பதிலென்ன?

> தீண்டாதார்களை உள்ளேவிட மறுக்கும் ஹோட்டல்களுக்கு லைஸென்ஸ் கொடுக்க மறுக்கவேணுமென்று நீங்கள் கேட்கிறீர்கள்.
> ஸமுதாயச்சீர்திருத்த விஷயங்களில் இதுமாதிரி நிர்பந்தக் கொள்கையை அநுஷ்டித்தால் சீர்திருத்தங்களின் நோக்கம் கைகூடாமல் போய்விடும். தீண்டாதார் ஆத்திரப்படக் கூடாது. அவஸரப்படக்கூடாது. காலமாறுதல் ஏற்பட்டுவருகிறது. இதுவும் ஏற்படும்

என்று அபயம் கொடுத்தார். ஆசாரச்சீர்திருத்த விஷயத்தில் நிர்பந்த முறை கூடாதென்று இன்று இவருக்குத் தோன்றிய தர்ம புத்தியைக் கண்டு நாம் என்ன நினைப்பது? மெஜாரிடி பலத்திமிராலும், அவசர சட்ட பலத்தாலும், போலீஸ் பயமுறுத்தலாலும் ஆலயப்பிரவேச அக்ரமத்தைப் பலாத்காரமாகச் செய்து வைத்த ஸி. ஆர். இன்று இப்படி தர்ம புத்தியுடன் பேசுவது யாரை ஏமாற்றவோ? இவர் இம்மாதிரி பேசுவதைக்கண்டு ஊரார் சிரிக்கமாட்டார்களா? ஆலயப்பிரவேச ஆவேசத்தின் போது இந்த தர்ம புத்தி மங்கியிருந்ததோ? இன்று ஸி. ஆர். சுட்ட குழாய். இவரிடம் அதிகாரமொன்றுமில்லை. ஆதலால் தர்ம புத்தி. நாளைமறுபடி அதிகாரம் கிடைத்தால் புலியானது பாரணை முடித்துக் கொண்ட மாதிரி நடக்காதென்று யார் சொல்லமுடியும்? பேசுவதொன்று, செய்வது வேறாக இருப்பவர்களை உலகம் எப்படி நம்பும்?

நவீன விஞ்ஞானமும்—புராண காலத்திய யுத்தங்களும்.

(என். கே. வெங்கடேசம், அனந்தப்பூர்)

1940 ஹு செப்டம்பர் மீ 5உ ஆர்ய தாமத்தில் அண்ணாமலை நகர் ஸ்ரீ Y. மஹாலிங்க சாஸ்த்ரிகள் அவர்கள் "தற்சமயம் உலகிற்கும்—ஹிட்லருக்கும் நிகழும் சண்டையில் கையாளப்படும் தந்த்ரங்கள் (யுத்த காண்டம் ஸர்க்கம் 80)ல் உள்ள இந்திரஜித் தன் மாயையால் புகையை உண்டாக்கி அதில் மறைந்து நின்று யுத்தம் செய்ததை அனுஸரித்தது தான் என்றும், நமது நாகரீகம், புராதன கிரந்தங்கள் இவைகளில் தலையிட்டுள்ள மேல் நாட்டார்கள் சொல்வது போல் நம் புராணக்கதைகளில் காணும் வீர தீர செய்கைகள் வெறும் கற்பனை கதைகளல்லவென்றும், எழுதியுள்ளார்கள். சில காலத்திற்கு முன்பு "புஷ்பக" விமானம் போன்ற ஆகாய கப்பல், ஆகாசவாணியை ஒத்த ஒலிபரப்பு (Wave-Transmission of sound) என்ற நம்பிக்கை, கற்பனா சக்தி நிறைந்த கவிகளின் கட்டுக்கதையாக பாவிக்கப்பட்டது. இன்று அவைகளே விஞ்ஞான தத்வங்கள். ஜீவனை ஜோதி என்று பாவிப்பது தத்வமில்லை என்று அறிவிக்கிறார்கள். நாம் புராணங்களில் படித்த விஷயங்கள் இன்று கனிந்த தத்வங்களாகவும், நாம் நேரே காணும் சாக்ஷிகளுக்கு சற்றேனும் தத்வங்களில் பின்னடையாததாகவும் பார்க்கப்படுகின்றன. அப்படிப்பட்ட விஷயங்களில் சிலவற்றைக்கீழே தருகிறேன்.

1. தேவீபாகவதம். III 2. (40–41) தேவி "சொந்தசக்தியாலும்" "காற்றாலும்" செலுத்தப்பட்ட விமானத்தில் ஆகாயத்தில் சென்றதை சொல்லப்படுகிறது.

2. தேவீபாகவதம். 10. 13. அருணாசுரனால் தலைமை வகிக்கப்பட்ட அசுரர்களை கணக்கிடமுடியாத தேனீக்களை அனுப்பி அவரவர்கள் இடத்தில் ஒருவர் சாவை இன்னொருவர் அறியாமல் மடியும்படி செய்ததால் அவளை ப்ரமரி என்று வர்ணிக்கிறது. (ஜெர்மனியர்கள் விஷப்புகையும், பாக்டீரியல் பாம்புகளையும் உபயோகிப்பதாகச் சொல்லப்படுகிறது.)

3. ஹரிவம்சம். 2. 96. வஜ்ரநாமன் என்று அசுரனுக்கும் ப்ரத்யும்னனுக்கும் நடந்த தரை சண்டையையும், இந்த்ரன் குமாரன் ஜெயந்தனுக்கும் நடந்த ஆகாய சண்டையையும் வர்ணிக்கிறது.

4. ஹரிவம்சம். 3. 128. கிருஷ்ணனால் எதிர்க்கப்பட்ட அசுரன் யமுனாநதியின் தண்ணீர் அடியில் சென்றான். அங்கு அவனை தொடர்ந்து சென்று கிருஷ்ணன் கொன்று விட்டார்.

5. மஹாபாரதம்—வனபர்வம் 168. 170. கடலுக்கு அடியில் மறைக்கப்பட்ட மூன்று கோடி நிவாத கவசர்களை எதிர்த்து அர்ஜுனன் கொன்றான்.

6. மஹாபாரதம்—வனபர்வம் 173. ஆகாயத்தில் ஹிரண்யபுர அசுரர்களை அர்ஜுனன் எதிர்த்து பாழாக்கினான்.

7. துரோணபர்வம்—48. அபிமன்யு தரைச் சண்டையில் தன் ரதம், வில் முதலிய ஆயுதங்களை இழந்தபின் ஆகாயத்தில் எழும்பி அங்கிருந்து ஓர் பறவை போல் யுத்தம் செய்ததை வர்ணிக்கப் படுகிறது.

8. வனபர்வம் —282–283. ராவணன் இலங்கையை சுற்றியுள்ள கடலில் விரோதிகள் அணுகாமலிருக்க அமைத்திருந்த பலவிதமான கடலின் அடியிலுள்ள யந்த்ரங்களுக்கும் பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இலங்கையைச் சுற்றிலும் நீர் மூழ்கிகள், சுரங்கங்கள், டார்பிடோகள் அமைத்திருந்ததாகச் சொல்லப்படுகிறது.

9. ஸ்கந்த புராணம், மஹேஸ்வரகாண்ட (கௌமாரிகம்) ஸர்க்—4—தாரகாசுரனுக்கும் இந்த்ரனுக்கும் நடந்த யுத்தத்தில் தாரகன் வெடிகுண்டை போன்ற எரியக்கூடிய சக்தியுடைய தூண்களால் ஆகிய ஸைலா அஸ்த்ரம் என்ற ஓர் ஆயுதத்தை உபயோகித்தாகச் சொல்லப்படுகிறது. ஷை யுத்த வர்ணனையிலடங்கிய தேவர்களும் அசுரர்களும் ஒவ்வொருவரும் உபயோகித்த ஆயுதங்களின் வர்ணனை மயிர்க்கூச்சிலிடும்படியும் யந்த்ரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு யுத்தம் நடக்கும் தற்கால சங்கதிகளுக்கு சற்றேனும் பின்னடைந்ததாக இல்லை. எந்த விஞ்ஞானம் தற்காலம் நாசமாக்கும் என்ஜின்களை அளித்திருக்கிறதோ, அதே விஞ்ஞானம் பன்மடங்கு சக்தியுடன் கூடியதாய் அந்த பயங்கர என்ஜின்களை தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் புராதனமான இப்பாரத பூமியில் புராதன வாழ்கையில் அளித்திருக்கவேண்டும்.

தாரகன் தன் சக்தியால் இருப்பிடத்தை மஹி-ஸாகர ஸங்கமத்தில் அதாவது சற்றேரக் குறைய ஸிந்து, நர்மதா சமவெளிப் பிரதேசத்தில் இருந்ததாகச்சொல்லப்படுகிறது அந்த இடத்தில் அல்லவா நாம் புராதன நாகரீகத்தின் சின்னங்களை காண்கிறோம்? அது புராதன தேவர்களுடையவும் அசுரர்களுடையவும் நாகரீகமா? அதை சரித்திரகாரர்கள் காலப்போக்கில் நிர்ணயிக்கவேண்டும்.

அத்வைதஸபை, கும்பகோணம்

ஓர் திருத்தம்.

அத்வைதஸபை ஆதரவில் நடத்தப்பட்டு வரும் "தர்மக்ஞ" பரீக்ஷைக்காகவும் "கிருஹ்யக்ஞ" பரீக்ஷைக்காகவும் சென்னை கோபாலபுரம் பென்ஷன் இஞ்சினீயர் ஸ்ரீமான் கே. கணேசய்யர் ஸம்பாவனைக்காக சென்ற வருஷத்தில் ரூ 200/-ம் இந்த வருஷத்தில் ரூ 200/-ம் கொடுத்திருக்கிறார்கள் அதைக்கொண்டு ஸ்ரீ ஆசார்யாள் அவர்கள் ஆக்ஞைப்படி ஸபையில் தர்மக்ஞ கிரஹ்யக்ஞ பரீக்ஷைகள் நடத்தப்பட்டன. ஸ்ரீமான் கணேசய்யர் கொடுத்தத்தொகையிலிருந்து ரூ 150/-இந்த வருஷத்தில் தர்மக்ஞ பரீக்ஷையில் தேறிய ஸ்ரீ காசிகனபாடிகளுக்கு ஸம்பாவனை செய்யப்பட்டது. அதை அக்ராஸனாதிபதி அவர்களுக்காக குன்னம் ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யர் அவர்களால் கொடுக்கப்பட்டது.

பிரஹதி ப்ரைஸ் பரீக்ஷையில் தேறிய கிருஷ்ணராஜபுரம் ஸ்ரீ கே. ராமமூர்த்தி சாஸ்திரிகளுக்கு மைலாப்பூர் அட்வகேட் ஸ்ரீ தர்மரக்ஷாமணி கே. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள் கொடுத்த ரூ 15/-யும் ஸம்பாவனை செய்யப்பட்டது.

பேத திக்காரம் ப்ரைஸ் பரீக்ஷையில் தேறிய சிறுவாமணி எஸ். ஆர். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளுக்கு ஸபையிலிருந்து ரூ 15/-ஸம்பாவனை செய்யப்பட்டது.

தர்ம ஸம்ரக்ஷண வாலிபர் சங்கம்

இராமேசுவரம்

ஏழாவது ஏகாதசி விழா

ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஆசார்ய ஸ்வாமிகள் அவர்கள் ஆக்ஞையின் பிரகாரம் நடந்து வருகிற புராண பிரசன விழா இன்று இரவு 8 மணி ஷை சங்க கார்யாலயத்தில் வை. முத்து சுப்பிரமணிய சாஸ்திரி அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

முன்னுரையில் நமது மதத்தின் பெருமையைப்பற்றி கூறியபின் தற்காலம் அரசியல் வாதிகளால் ஏற்படும் இன்னல்களை தடுக்க வேண்டுமானால் நமதுமத சாஸ்திரங்களை கற்றுணர்ந்து அவைகளை சீர்திருத்த வாதிகள் என்று சொல்லிக் கொண்டு மதத்தை நாசம் செய்யும் துரோகிகளுக்கு தெரியும் படியாக செய்வது தான் மதாபிமானிகளின் முதல் கடமை என்று சொல்லி முடித்தபின், சங்கத் தலைவர் மு.வ. கோபால சாஸ்திரியள் அவர்களால் தர்மம் என்றால் என்ன என்ற விஷயத்தைப் பற்றி உபன்யசிக்கும் போது தர்மத்தை நாம் காப்பாற்றினால் தர்மம் நம்மை காப்பாற்றுமென்றும் கூறி மனுஷ்ய தர்மத்தை விசேஷமாக எடுத்து கூறிய பின் சங்க காரியதரிசி அவர்களால் சங்கத்தின் சட்டதிட்டங்களை எடுத்து கூறப்பட்டு, நிர்வாஹஸ்தர் K. சுப்பிரமணிய சர்மா அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கீதம் பாடிய பின் தீபாராதனையுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

மு. வ. கோபால சாஸ்திரியர்

திருவல்லிக்கேணி

ஷஷ்டி பூர்த்தி

தமிழ்ச் சங்க வித்வானாகிய ஸ்ரீ உ. வே. சிந்தாமணி கோபாலசாரியரின் ஷஷ்டி பூர்த்தி வைபவமானது ஸ்ரீ அஹோபில மடத்தில் 8-உ யன்று விமர்சையாக நடை பெற்றது.

ஜஸ்டிஸ் கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஸபையில் பல பிரமுகர்கள் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளைப் பாராட்டிப் பேசினார்கள். ஜஸ்டிஸ் அய்யங்காரவர்களால் சால்வை ஸம்மானம் மளிக்கப் பட்டது.

ந-நி

நாகை

ஸ்ரீராமாயண பிரவசனம்.

நாளது ஆவணி-மீ 28உ (12—9—40.) குருவாரத்தன்று ஆரம்பித்து நாகப்பட்டினத்தில் காலையில் ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்மன் கோவில் தர்மகர்த்தா பண்டகசாலை மகா-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கள் கிரஹத்தில் மூலபாராயணமும், மாலையில் நாஷனல் ஹைஸ்கூலில் ஸ்ரீமத்ராமாயண பிரவசனமும் 15-தினங்கள் தேவங்குடி பிர்ம-ஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களால் நடத்தப்படும்.

சமீபகாலத்தில் பிரம்ம-ஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களால் செய்யப்பட்ட ஸ்ரீமத் பாகவத பிரவசனத்தைக் கேட்ட பக்தகோடிகளின் உத்சாகத்தை அனுசரித்து இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

என், சாம்பசிவ அய்யர், வக்கீல்.

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ வெ. ஸோ. சர்மா)

சிறந்த தந்த்ரம் !! எப்பொழுதோ யாரோ எதற்கோ தந்து கையில் கிடைத்த பணத்தை சட்ட ஸபை மஹம்மதிய அங்கத்தினர் விருப்பப்படி டில்லி சபைக்கெதிரில் ஓர் மசூதி கட்டிக் கொடுக்கிறார் வைச்ராய்!!

பழிக்கு பாத்ரம்!! மாகாண ஆக்ஷியை காங்கிரஸ் ஏற்க வேண்டுமென ராஜாஜீ சாணக்ய தந்த்ரம் செய்கிறார்! ஸ்ரீ ஸத்ய மூர்த்தியோ பட்டவர்த்தனமாக பேசி ஏமாறுகிறார். பாவம் !!

ருமேனியா அமளி !! மேனாட்டு நாகரீகம் அடுத்த நிமிஷம் யாருக்கு என்ன என்று பயந்து சாகும்படி செய்கிறது,! ருமேனிய அரசர் கிமிஷத்தில் இறக்கப்பட்டார். என்ன அராஜகம் !!

பலக்கிறதே ! ஓயவில்லையே !! நாளுக்கு நாள் யுத்தம் வெவ்வேறிடத்தில் வேவ்வேறு வகையாக கிளம்புகிறது. பாக்கிநாடுகளும் சேனைதயார் செய்கின்றன. எப்போ இதற்கு முடிவு ?

யார் கொள்ளையர் !! ஹிட்லர் பிறரை கொள்ளையர் என்பதில் ஆச்சர்யமில்லை !! அவர்தான் தர்ம யுத்தம் புரிவதாகவுங் கூறுகிறார்! ஒவ்வொருவரும், விசேஷமாக துஷ்டரும் அப்படி கூறுதல் ஸஹஜமாகி விட்டது !!

யாரழைக்கிறார் !! இங்கிலாந்தை தான் குறிப்பிட்டகாலத்தில் பிடிக்க முடியாததற்கு அசட்டு ஸமாதானங் கூறி விரைவில் தானங்கு வருவதாக கூறுகிறார்.

வங்க சபை விபரீதம் !! தாரமிழந்தவர் விதவையே மணக்க வேண்டுமென்றார் அஸந்தர்ப்பமான சட்டம் செய்ய முயல்கிறது. இஃதென்ன விபரீதம் !!

கோடி திருநாள்!! சண்டைக்கு தனந்தேட சென்ற சனியன்று தெருதெருவாக வசூல் செய்யப்பட்டது.

சட்டதூர் விநியோகம் !! சிதம்பரத்திற் கருகே பொறுமையால் ஓர் பிராமணே தரர் சாரதா சட்டப் படி பொய்யாக வழக்கு தொடுததார். அது பொய்யென தீர்ப்பு கூறப்பட்டது! பொய்யரை சிக்ஷித்தல் அவச்யம்!!

காசிவாஸி நைஷ்டிகர்!! பிரும்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகளவர்கள் (ஸ்ரீ கீதா மடத்தைச் சார்ந்தவர்) தமிழ் நாட்டில் தர்ம ப்ரசாரம் செய்து வருகிறார்கள். மைலை ஸம்ஸ்கிருத கலாசலையிலும் ஸ்ரீ சங்கர மடத்திலும் அரிய இரு உபன்யாஸங்கள் செய்தார். மிகவும் ருசிகரமாயிருப்பதால் பல பக்தர்கள் பிரும்ம வித்யா விமர்சினி ஸபை போன்ற விடங்களில் உபன்யாஸ ஏற்பாடு செய்கின்றனர்.

சில ரஸிகரது வெறுப்பு ! ஸமீபத்தில் சென்னையில் ஓர் கோமாளி பத்திரிகை ஒரு நிருபரது ஷஷ்டி பூர்த்தியைக் கொண்டாடி அவருக்கு பணமுடிப்பு அளித்தது. அத்துடன் நிற்காமல் வேதாந்த மேனியில் ஒருவரைச் சிறக்க வைப்பது என்று வியாக்யானம் செய்கிறது. உண்மை பாண்டித்யமும் தர்மமும் இதனால் நன்கு மதிக்கப் படுவதில்லை.

ஸ்ரீமத் ராமாயண பட்டாபிஷேகம்

கும்பகோணம்.

கும்பகோணம் மேலய்யன் தெருவிலிருக்கும் ரிடயர்டு ஸ்டேஷன் மாஸ்டர் ஸ்ரீ ஏ. வைத்தினாதய்யர் அவர்கள் கிருகத்தில் மஹாமஹோபாத்தியாய ஸ்ரீ யக்ஞ சுவாமி சாஸ்திரியாள் அவர்களின் பிரிய சிஷ்யான மன்னார்குடி ஸ்ரீ வேத மூர்த்தி வேம்புசாஸ்திரியார் அவர்கள் ஸ்ரீமத் ராமாயணத்தை ஆரம்பித்து 6 மாத காலங்களாய் வெகு அழகாகவும் வேதப் பிராமணங்களுடனும் கீதை முதலான சாஸ்திர பிரமாணங்களுடனும் சுதர்மத்தில் சிரத்தையும் ஸ்ரீராமபிரானிடத்தில் பக்தியும் ஜனங்களுக்கு உண்டாகும்படிக்கும் பண்டிதர்கள் முதல் எல்லோரும் சந்தோஷப் படும்படிக்கும் இனிமையான சங்கீதத்துடன் உபன்னியாஸம் செய்து வந்தார்கள். ஷை ராமாயணம் நாளது ஆவணி-மீ 14-உ பட்டாபிஷேகத்துடன் பூர்த்தியடைந்தது. அந்த சமயம் அநேக பண்டிதர்களும் பிரபுகளும் பக்தர்களும் ஏராளமாக வந்திருந்தார்கள். ஷை சாஸ்திரியார் அவர்கள் ராமாயணத்தை ஆதி முதல் கடைசி வரையில் கோடிகரித்து பட்டாபிஷேக கட்டத்தையும் வெகு அழகாக உபன்னியாஸம் செய்தார்கள். பிறகு காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குருஸ்ரீபரமாசாரியாளால் அனுக்ரஹரூபமாய் அனுப்பப்பட்ட விபூதி அட்சதை சால்வை முதலானவைகளை சாஸ்திரியார் அவர்களுக்கு சமர்ப்பிக்கப் பட்டன. பிறகு மகா ஜனங்களால் சம்மானம் கொடுக்கப்பட்ட வேஷ்டி புடவை வெள்ளிப் பாத்திரங்கள் பணமுடிப்புகளையும் சமர்ப்பிக்கப் பட்டன. பிறகு பிரஸாத வினியோகங்களுடன் பூர்த்தி யடைந்தது. மறுநாள் பல சுருதியன்றைய தினம் ஜனங்கள் சார்பிலும் சொந்த முறையிலும் டாக்டர் ஸ்ரீ ஏ. முத்துஸாமி அய்யர் அவர்கள் ஸ்ரீ சாஸ்திரியள் அவர்களுக்கு மாலை சூட்டி சாஸ்திரியள் அவர்களுடைய பிரவசன சக்தியையும், குணங்களையும் பாராட்டினார்கள், சாஸ்திரியள் அவர்கள் அதற்கு தக்க பதில் சொன்னார்கள்.

பிறகு ராமாயண கிரந்தத்தோடு சாஸ்திரியள் அவர்களை அழைத்துக் கொண்டு வேத கோஷத்துடனும் வாத்திய கோஷத்துடனும் அவர்கள் ஜாகையில் கொண்டு போய் விடப்பட்டது.

ஏ. வைத்தினாதய்யர்.

தக்ஷிணாயன பிரதம விவாஹம்

ஓர் விளக்கம்

(போலகம் ஸ்ரீ ஸுந்தரேச சாஸ்திரிகள் தெரிவிப்பதாவது)

சென்ற வாரத்திய ஆர்யதர்மம்பத்திரிகையைப் பார்த்தேன். அதில் கும்பகோணத்தில் சென்ற வாரத்தில் நடந்த அத்வைத ஸபையில் நான் சொன்ன சிலவார்த்தைகளை வெளியிடாமலும் விவாஹ விசாரத்தை ஸ்ரீஸ்வாமிகள் அனுப்பும்படி சொன்னதாக அதிக வார்த்தையையும் சேர்த்திருப்பதால் அதை சரியாக விளக்க விரும்புகிறேன்.

நான் ஆசார்யாளை தர்சனம் செய்துவந்த விஷயத்தைத் தெரிந்து ஸபையார் என்னைக் கேட்டபடியால் பெரியவாளுடைய அபிப்பிராயத்தை தான் தெரிவித்தேன். நமது தேசத்தில் பொதுவாக தர்மா தர்ம விஷயங்களை பண்டிதர்கள் மூலமாக விசாரித்து நிர்ணயம்செய்து கொடுப்பது ஸ்ரீ மடங்களின் கார்யமென்றும் ஸபையில் ஒருஅபிப்பிராயம் மடத்தில் மற்றொரு அபிப்பிராயமென்று இராமல் ஒரே முகமாக தர்ம ஸ்வரூபம் வெளி வருவது ஜனங்களுக்கு அனுகூலமாக யிருக்குமென்றும் ஆகினும ப்ரகிருதமான தக்ஷிணாயன பிரதம விவாஹ விஷயத்தை ஸபையில் விசாரிப்பதற்குஎடுத்துக்கொண்டு விட்டபடியால் ஸபையில் வந்திருக்கும் அபிக்ஞர்களிடமிருந்து தனித்தனியாக அபிப்பிராயத்தைப் பெற்று எல்லா அபிப்பிராயங்களையும் ஆர்யதர்மம் மூலமாக வெளியிடுவது உசிதமென்றும், சிலர் செய்த தீர்மான மாத்திரம் ஜனங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் ஸம்மதமாகவே இருக்குமென்கிற நியமமில்லாததால் எல்லா பண்டிதர்களின் அபிப்பிராயத்தை வெளியிடுவது தான் உசிதமென்றும் ஸ்ரீமத் ஆசார்யாளின் ஆக்ஞை என்று நான் ஸபையில் தெரிவித்தேன்.

வாலி வதம்

ஓர் விஞ்ஞாபனம்

இந்தப் பத்திரிகையில் இரண்டு வித்வான்கள் வாலியை ஸ்ரீ ராமர் மறைவில் இருந்தே பாணத்தால் அடித்தார் என்று எழுதியுள்ளார்கள். அதன் தாத்பர்யம் பின் குறிக்கப்படுவது தானா?

ஸ்ரீ ராமர் சில மரங்களின் பின்னாலே நின்று கொண்டார். அந்த இடத்திலிருந்து அவர் வாலியை பார்க்கவே முடியாது. வாலியும் ஸ்ரீ ராமரைப் பார்க்க முடியாது. அப்படிப்பட்ட இடத்தில் நின்று கொண்டே ஸ்ரீராமர் பாணத்தை எய்தார்.

அல்லது வேறு அர்த்தம் என்ன ? தயை செய்து பதில் அளிக்கப் பிரார்த்திக்கிறேன்

பி. ஏ, சுப்ரமண்ய அய்யர்

கும்பகோணம் ஏகாதசி உபந்யாஸம்

ஆசார்யாள் ஆக்ஞைபடி 29—8—30 குருவாரம் ஏகாதசி யன்று மஹாமஹோ உபாத்தியாய பாரதசிம்மம் வித்தியாபூஷண ஸ்ரீ கா. பே. ராமச்சந்திராச்சார் அவர்கள் மாலை 4மணி முதல் வர்ணாச்ரம தர்மம் ஸ்ரீகிருஷ்ணாவதாரம் என்பதை பற்றி 7மணி வரையில் தர்மத்தின் நுட்பம் நாம் செய்ய வேண்டிய கடமை என்பதையும் அவதாரத்தையும் வெகு அழகாயும் பக்தியாயும் உபந்யாஸித்தார்கள். சுமார் 200 ஸ்திரீ புருஷர்கள் விஜயமாகி கதாசிரவணம் செய்தார்கள்.

12—9—40 குருவாரம் ஏகாதசி தினம் ஜாம்ஷட்பூரிலிருந்து வந்திருக்கும் ஸ்ரீ டி. வி. ராமச்சந்திர சாஸ்திரிகள் அவர்கள் மாலை $4\frac{1}{4}$ மணி முதல் ஆக்ஞை பிரகாரம் ஸ்ரீ விசாலாக்ஷி அம்மன் சன்னிதியில் சிவ கீதா உபந்யாஸம் செய்வார்கள் யாவரும் விஜயமாகும் படி பிரார்த்திக்கிறேன்.

எஸ். சுப்ரமணிய அய்யர்.
முத்ராதிகாரி.

திவான்பகதூர்
V. K. ராமானுஜாசாரியார் அவர்கள் எழுதியது.

திருவாய்மொழி (3வால்யூம்)	7	8	0
கீதார்த்தசங்ரஹப் பாட்டுகள்	0	6	0
ராமாயணசாரம் பைண்ட்	1	8	0
ஷை ராப்பர்	1	4	0
சித்திர ராமாயணம்(பூஜையில் இருக்கக்கூடியது)	1	0	0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்.

சட்டசபை பொது ஜன அபிப்ராயத்தை வெளியிடும் ஸ்தாபன மல்ல.

(அக்னிஹோத்ரம் ராமானுஜதாதாசாரியார்)
மீமாம்ஸா சிரோமணி

நவீன நாகரீகத்தில் சட்டசபைகளுக்கு அளவு கடந்து மதிப்பு ஏற்பட்டது. சட்டசபை இல்லாத அரசியலே உலகில் இல்லை எலக்ஷன் மூலம் சட்டசபைக்குள் வருபவர்களே பொதுஜன அபிப்ராயத்தை அறிய ஏற்பட்ட கருவிகள் என எங்கும் பறைசாற்றப்படுகிறது. அரசர் ஆக்ஷியிலும், யதேச்சாதிகாரி ஆக்ஷியிலும், பொதுஜன நாயக அபிப்ராயத்திற்கு மதிப்பில்லாமல் போய் ஜநநாயக தத்வம் பாழாகிவிடுகின்றதென்ற காரணத்தாலேயே எலக்ஷன் மூலம் பொதுஜன ப்ரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் அரசியலை நடத்துவதென்ற கொள்கை ஏற்பட்டது. ஆனால் இந்தியாவிலுள்ள சட்டசபைகளுடையவும், உலக சட்டசபைகளுடையவும் சரித்ரத்தை நன்கு ஆராய்ந்தால் சட்டசபைகளில் பொதுஜன அபிப்ராயம் பிரதிபலிப்பதில்லை என்று தீர்மானமாகிறது. இந்தியா ஸம்மந்தம்பட்டவரை நடந்த ஆலயப்பிரவேசக்கிளர்ச்சி, சாரதாசட்டகிளர்ச்சி இவைகள் போன்றவைகளின் சரித்ரத்தை கவனிப்பவர்கள் சட்டசபைகள்மீது அளவுகடந்த நம்பிக்கை வைக்கமாட்டார்கள். பிரஞ்சு அரசியலில் சட்டசபையில் உள்ள பிரதிநிதிகள் மூலம் அடிக்கடி மந்திரி ஸபைமாறுகிறது. இதெல்லாம் பொதுஜனங்களுடைய அபிப்ராயமாறுதல் காரணமாக ஏற்பட்டதாக அறிவாளி யாரும் சொல்லமுடியாது. பிரிட்டனிலும் 1939-வருஷம் பார்லிமெண்டில் சேம்பர்லேன்மீது பூர்ணநம்பிக்கை தீர்மானம் நிறைவேறப்பட்டது. அதற்கு மறுநாள் நடந்த போது ஜனவாக்கில் சேம்பர்லேனுக்கு ஸாதகமாக 100க்கு 32 விதம் ஓட்டுபதிவாயிற்று விரோதமாக நூற்றுக்கு 68 விதம் வாக்கு பதிவாயிற்று.

இதுவும் சட்டசபைகளின் மதிப்பில் விசேஷ மோஹமுள்ளவர்களுக்கு விழிப்பை உண்டுபண்ணும். மேலும் சட்டசபைகள் சில ஸமயம் பொதுஜன அபிப்ராயத்தை அறிய தகுந்த கருவியாக ஆக வில்லை என்பதை அரசியல் வாதிகளே ஒப்புகிறார்கள். அதனாலேயே ஸ்விட்ஸர்லாந்து அரசியலில் மத விஷயங்களில் சட்டசபை முடிவு போதியதன்று என்று கண்டு பொது ஜன வாக் கெடுக்கச் சொல்லப்படுகிறது. இவைகளை ஊன்றி கவனித்தால் சட்டசபை பொதுஜன அபிப்ராயத்தை பிரதிபலிக்கவில்லை என்று தீர்மானமாகிறது.

ஆனால்அரசியல் வாதிகளுக்கு சட்டசபை பக்தி குறைவதாகக்காணோம். சட்டசபை மெஜாரிட்டி எலக்ஷன் இவைகளை நம்பியே தேசத்தில் கக்ஷிகள் உயிர் வாழ்ந்து வருகின்றன! சட்டசபை தத்துவம் அதன் உண்மை இவைகளை பஹிரங்கமாக வெளியிட்டு எந்த கக்ஷியும் பேசுவதில்லை. அநுபவரீதியிலோ தர்க்கரீதியிலோ சட்டசபை தத்துவத்தில், குறைகளிருப்பதாகத் தெரியவந்தால் அதை ஏன் பஹிரங்கமாக வெளியிடக்கூடாது? பொதுஜன அபிப்ராயம் சட்டசபை தத்துவத்தில் நன்கு வெளியாவதில்லை என்பது இரண்டாந்தரமான குறையல்ல. சட்டசபை தத்துவத்திற்கே இந்தக்குறை உள்வைத்து விடுகிறது.

சட்டசபை தத்துவத்தில் விசேஷ மோஹம் வைப்பது என்பது மேனாட்டில் ஏற்பட்ட கொள்கை. Parliament is a mirror of a Nation என்று பர்க் என்பவர் சட்டசபைகளை தேசத்தின் கண்ணாடி என்று புகழ்ந்து விட்டார். உலகிலுள்ள அரசியல் கக்ஷிகளும் இதை திருப்பிப்பாட ஆரம்பித்து விட்டன.

உண்மை அறிவாளிக்கு சட்டசபை தத்துவத்தில் மோகமேற்படக் காரணமில்லை ஏன்? பொதுஜனங்களின் அபிப்ருயத்தை நேருக்கு நேராக ஒவ்வொரு சமயமும் வாங்கமுடியாது என்ற காரணத்தினாலேயே சட்டசபைகள் ஏற்பட்டன. ஆனால் சட்டசபைகள் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டன ஒரு சட்டசபையின் ஆயுள் மூன்று வருஷமோ, ஐந்துவருஷமோ வைத்துக்கொள்ளலாம். இந்த ஆயுள்காலத்தில் சட்டசபை மீது பொது ஜனங்களுக்கு உருவான ரீதியில் சட்ட மூலமான ஆதிக்யம் கிடையாது இதனால் சட்டசபைகள் எலக்ஷனுக்குப் பிறகு பொதுஜன அபிப்ராயத்தை லக்ஷ்யம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தமில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொதுஜன அபிப்பிராயத்திற்கு விரோதமாக நடக்க இட உண்டு என்பதற்கு தர்க்கரீதியிலும், அநுபவரீதியிலும் இடமிருந்தும் சட்டசபை தத்துவத்தை சொல்லும் அரசியலில் சட்டசபை அபிப்பிருயத்திற்கும் பொதுஜன அபிப்பிருயத்திற்கும் முரண்பாடு ஏற்படும் காலத்தில் என்ன செய்வதென்று சொல்ல வில்லை. இடைதேர்தல் பொதுஜன அபிப்பிருயத்தை வெளியிடுங்கருவியாகாது என்று புரபொஸர் கீத் போன்ற அரசியல் தத்துவ சாஸ்திரிகளே கூறுகிறார்கள். தர்க்ரீதியிலும் இது உண்மையாகிறது. சட்டசபை தேசமுழுவதின் சார்பாக அபிப்பிருயத்தை வெளியிடுகிறது. பொதுஜன அபிப்பிருயத்தோடு இது முரண்படுகிறதா இல்லையா என்று பார்க்க ஒரு மூலையில் தேர்தல் நடத்துவது எப்படிப்போதுமானதாகும்? அந்தத்தொகுதியின் அபிப்பிருயம் அந்தத்தேர்தலினால் வெளியானாலும் அது மற்றத்தொகுதியின் முடிவை நிர்ணயிக்க எப்படி சக்தி உள்ளதாகும் பொது தேர்தல்களோ அடிக்கடி நடக்கக்கூடியதில்லை. ஆகவே பொதுத்தேர்தல்களுக் கிடையில் சட்டசபை பொதுஜன அபிப்பிருயத்தை பின்பற்றுகிறதா இல்லையா என்று நிர்ணயிக்க சட்டசபை தத்துவத்தில் சட்டரீதியான கருவியை ஒன்றையும் காணோம். இந்நிலையில் சட்டசபை அபிப்பிருயத்தில் எப்படி மதிப்பு வைக்கமுடியும்.?

ஒருவருக்கு ஒரு சமயம் நாம் ஓட்டுக் கொடுக்கிறோம். ஓட்டுக்கொடுக்குங்காலத்தில் நமது அபிப்ராயம் செல்வாக்குப் பெறுகிறது. எலக்ஷன் ஆனபிறகு அவர் நம் பெயரால் பலகாரியங்களைச் செய்கிறார் ஆனால் அப்பொழுது நம் அபிப்ருயத்தையே இவர் நிச்சயமாகப் பின்பற்றுவாரென்று சொல்லமுடியவில்லை இப்பொழுது நமது அபிப்ராயத்திற்கு சட்டரீதியில் செல்வாக்கில்லை. நமக்கு விரோதமான அபிப்ராயத்தை அவர்வெளியிட்டாலும் அதுநம்முடைய அபிப்ராயமாகவே ஆகிறது. இதுமிகவும் விசித்திரமானது.

எலக்ஷன் ஆனபிறகு சட்டசபைகள் பொதுஜனங்களுக்கு பொறுப்பானதாய் இல்லாமலிருக்கும் வரை சட்டசபை ஆட்சியை ஜனநாயக ஆட்சியாக எந்த அறிவாளியும் ஒப்புக்கொள்ள முடியாது:

சட்டசபைதத்வத்தில் பொது தேர்த்தல்களுக்கிடையில் பொதுஜன அபிப்ராயத்திற்கு மதிப்பில்லாமல் போய்விடுவதை ஸனதனிகள் பல ஸமயம் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்

இந்த உண்மை இப்பொழுது தான் மேல்நாட்டாருக்குப் பட்டிருக்கிறது. பிரபல அரசியல் வாதியாகிற பிரபொஸர் கீத் 29—8—40ல் ஹிந்துவில் எழுதியுள்ளவியாசத்தில் இதை நன்கு விளக்குகிறார். சட்டசபைச் சரித்திரத்தில் சட்டசபைக்கும் பொதுஜன அபிப்ராயத்திற்கும் முறண்பாடு ஏற்பட இடமுண்டு என்பதையும் அவ்வித முறண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் நன்கு நிரூபிக்கிறார். சட்டசபைக்கும் பொதுஜன அபிப்ராயத்திற்கும் விரோதமேற்பட்டால் சட்டசபை அபிப்ராயத்தை நிர்ணயிக்க இடைதேர்த்தல் பயனற்றது. என்று சொல்லுகிறார் பொது தேர்தலுக்கிடையில் சட்டசபை பொதுஜன அபிப்ராயம் இவைகளுக்கு முறண்பாடு ஏற்பட்டால் பொதுஜன அபிப்ராயத்தை நிர்ணயிக்க இன்றுள்ள அரசியலில் போதியஸாதனம் இல்லை என்பதை ஒப்புக்கொண்டே அவர் பேசுகிறார். சட்டசபைக்கும் பொதுஜன அபிப்ராயத்திற்கும் முரண்பாடு இல்லாமல் செய்வதற்காகச் யுத்தக்காலங்களில் ஒரு பொதுஜன ஸபை வேண்டுமென்றும், அந்த ஸபை சட்டசபையினுடைய செல்வாக்கிற்கு அடங்காததாக இருக்கவேண்டுமென்றும் சொல்லுகிறார். இதெல்லாம் சட்ட சபைகள் பொதுத் தேர்தல்களுக்குப்பிறகு பொதுஜன அபிப்ராயத்தை மீறி நடக்க இடமுண்டு என்ற கொள்கையையே ஸ்திரப்படுத்துகிறது. ஆகவே இந்திய அரசியல் வாதிகள் சட்டசபைகளை விகுப்படுத்தி பேசுவதை விட்டுவிட்டு இந்தக்குறையை நீக்க வழிஎன்ன என்பதைப்பற்றி ஆராயவேண்டும் சட்டசபை தத்துவத்தில் இருக்கக்கூடிய இந்தக் குறை நிவர்த்திக்கமுடியாததாகுமானால் சட்ட சபைதத்துவம் நமக்கு வேண்டாம். இதுவும் மறைமுகமாக நம்மை சட்டசபைக்கு அடிமைப்படுத்துகிறது. உண்மை ஸ்வாதந்திரியத்தை விரும்புகிறவர்கள் இதைவிரும்பமாட்டார்கள்.

ஜனநயகத்தைப் பற்றி பிரமாதமாகப் பேசுகிறவர்கள் சட்டசபையையே முக்யமானதாகக் கருதுகிறார்கள். உண்மையிலோ அது ஜனநாயகத்தின் புதைவிடமாக இருக்கிறது' ஜனங்களுடைய அபிப்ராயம் பிரதிபலிக்காத இடம் எப்படி ஜனநயகமானதாகும்? உலக அரசியல் வாதிகள் பொதுஜன அபிப்ராயத்திற்கு மதிப்புக் கொடுக்கவே சட்டசபை தத்துவத்தை வளர்த்தார்கள். அது இன்றுதனது நோக்கத்தில் தவறியதோடு விபரீத எண்ணத்தையும் கொடுக்க ஆரம்பித்து விட்டது. இதுதான் நவீன ஸித்தாந்தங்களின் போக்கு.

K. S. Ramasami Sastrigal, B.A., B.L.

		Rs.	A.	P
1.	Kalidasa's Heroes	0	6	0.
2.	The science of the soul	1	8	0
3.	Manu, the friend of Man	0	8	0
4.	Sandilya Bakthi Sutras	0	4	0
5.	The Gospel of Gita	0	3	0
6.	The future of Brahmin	0	2	0
7.	The Gita ideal of devotion	0	4	0
8.	நாரத பக்தி சூத்ரம்	0	2	0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்.

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும்
கைகண்ட இந்தியா மருந்து
இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்

ஹாஸ்ய கலா நிபுணரின் ஷஷ்டி பூர்த்தி.

ஆங்கிலத்தில் (S. V. V.) எஸ். வி. வி. என்ற புனை பெயர் பூண்டு, ஆங்கிலத்திலும், தமிழிலும், ஹாஸ்ய நடையில் வ்யாஸங்கள் எழுதிவரும் திருவண்ணாமலை எஸ். வி. விஜய ராகவாசாரியாரின், அறுபதாம் ஆண்டு நிறைவு விழா சென்னையில் மிக விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. வைபவம் யுனிவர்ஸிடி பரீக்ஷை ஹாலில் நடந்தது. மஹாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் தலைமை வகித்தார். பல பிரமுகர்களும், கலாசாலை மாணவர்களும் ஏராளமாக வந்திருந்தனர். ஸ்ரீ சாஸ்திரியார் அவருடைய வ்யாஸங்களில் ஹாஸ்யம் அபரிமிதமாய் இருப்பதைப் பற்றியும், அதுஎல்லோருக்கும் மகிழ்ச்சியை அளிப்பதைப்பற்றியும் ச்லாகித்துப் பேசினார். இந்தியர்கள் ஹாஸ்யச் சுவையற்றவர்கள் என்னும் அன்னிய தூஷணைக்கு இவருடைய வ்யாஸங்கள் சரியான பதிலாகும். தினப்படி சம்பவங்களை ஹாஸ்யமாகவிவரிப்பதில் மிகவும் திறமையுள்ளவர். இவருக்கு ரூ. 1400/- அடங்கிய ஒரு பண முடிப்பும் கொடுக்கப்பட்டது. ஆசிரியர் எஸ். வி. வி பண முடிப்பை கிருதக்ஞையுடன் பெற்றுக் கொள்வதாகவும், பணத்தைவிட ஜனங்களுடைய அன்பையே தான் பெரிதும் பாராட்டுவதாகச் சொன்னார். (ந-நி)

ஸ்ரீ வைகுண்டம் கோயில் நிர்வாக அதிகாரிக்குத் தண்டனை

கோவில் பணத்தைக் கையாடியதாக.

[நமது விசேஷ நிருபர்]

ஸ்ரீ வைகுண்டம் தேவஸ்தான எக்ஸிகூடிவ் ஆபீஸராயிருந்த ஸ்ரீமான் பெரியசாமி முதலியார் கோயில் பணங்களை கையாடல் செய்து நம்பிக்கை மோசம் செய்ததாகப் பல குற்றம் சாட்டி சென்னை ரிலிஜியஸ் எண்டோமெண்ட் போர்டு பிரஸிடெண்ட் அவரை வேலையை விட்டு நீக்கியதுடன் மேற்படியார் மீது 408, 409-வது பிரிவுப்படி ஸ்ரீவை சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஓர் வழக்கையும தாக்கல் செய்திருந்தது. சப்-மாஜிஸ்திரேட் ஸ்ரீமான் என் நம்பி அய்யங்கார் பி. ஏ. ஆல் விசாரணை செய்யப்பட்டு 25—8—40 திங்களன்று தீர்ப்புக் கூறப்பட்டது. மாஜி எக்ஸிகூடிவ் ஆபீஸர் முதலியாருக்கு நான்கு மாத தண்டனையும் 200 ரூ. அபராதமும் விதிக்கப்பட்டன. போர்டாருக்கு பாளையங் கோயடை வக்கீல் ஸ்ரீமான் ஸி. வி. கோபாலய்யரும், எதிரிக்கு நெல்லை ஸ்ரீமான் ஸாது கணபதி பந்துலுவும் ஆஜராயினர்.

யுத்த அபாய இன்ஷியூரன்ஸ் கட்டாயச் சட்டம்

இந்தியாவில் யுத்த அபாய இன்ஷியூரன்ஸ் சட்ட மொன்றை இந்தியா கவர்ன்மெண்டார் செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள்.

கவர்ன்மெண்டாரே இன்ஷியூரன்ஸ்தார்களாக யிருப்பார்கள். 20 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள சாக்குகளை விற்பனை செய்யும் ஒவ்வொரு வியாபாரியும் இந்தச்சட்டப்படி கட்டாயமாக இன்ஷியூரன்ஸ் செய்து கொள்ள வேணு மென்று அந்தச் சட்ட மூலம் விதிக்கப்படும்.

ஹிந்து மஹாஸபையின் எதிர்ப்பு

முஸ்லீம் லீக் செய்த தீர்மானத்தை அநுசரித்து இந்தியா கவர்ன்மெண்டார் முஸ்லீம் வகுப்பினரின் அதீதமான உரிமைகளுக்கு இணங்கிவிடக் கூடாதென்றும், மெஜாரிடியான ஹிந்து ஸமூஹத்திற்கு விரோதமான கார்யமெதையும் அவஸரப்பட்டுச்செய்து விடக்கூடாதென்று எச்சரித்தும் பல விடங்களிலுமுள்ள ஹிந்து ஸபைக்கிளைகள் வைஸ்ராயுக்குத் தந்தி கொடுத்திருக்கின்றன.

சென்னைமாகாண மஹாஸபைத் தலைவரான டாக்டர் வாதராஜுலு நாயுடுவும் ஒரு தந்தியனுப்பியுள்ளார்.

ஸ்காந்தத்தில் சில அபூர்வ கதைகள்.

ஹரியும் ஹரனும் ஒன்றே!! சிவன் உமயவளை நோக்கி எங்களிருவரில் பேதமில்லை. நான் சில ஸமயம் அவரை உபாஸிப்பேன். அவர் என்னை உபாஸிப்பார். அவர் கால் கங்கையை யான் தலை மீது வஹிக்கிறேன். எனது காலாவிட்ட கோட்டை அவர் சக்ரமாக கையிலேந்தினார். உக்ர நரஸிம்மனாக கர்ஜிக்கும வரை சரபனாக யான் வந்து அடக்கினேன். பாணாசுரனுக்கு பரிந்து வந்த என்னை மனுஷ்யனாக வந்து அவர் அடக்கினார்.

ஸமுத்ரம் உப்பானது! தேவர்கள் நடத்திய ஸத்ர யாகத்தில் பிராமணர்களுக்கு வேண்டிய தக்ஷிணை கொடுக்க முடியாமல் ஆகாயத்தில் சென்றனர். பிராமணர் அங்கும் சென்றனர். தேவர் சமுத்திரத்தைச் சரணமடைந்தனர், சமுத்ரமவர்களைத் தனக்குள்ளே பதுக்கிவைத்து பிராமணர் களுக்கு அன்னமிட்டு அன்னத்தில் மத்ஸ்யத்தை மறைத்து கொடுத்தான் அதனால் அவர்கள் ஆகாயத்தில் செல்லும் சக்தி அற்றுபோய் விட்டது. காரணத்தை அறிந்த அவர்கள் சமுத்ரம் உப்பாகும்படியும் அதை எவரும் தீண்டாதபடியும் சபித்தனர். தேவர்கள் அவர்களை சரணமடைந்து தக்ஷிணை தந்து பூஸுரர் என பெயரிட்டு பர்வகாலங்களில் அங்கு ஸ்நாநம் செய்தவர் நற்கதி அடையுமாறு வரம் வாங்கினர்கள்.

ஸ்ரீ சங்கர மடத்தில் பிரும்மஸ்ரீ வத்ஸ. சோம தேவ சர்மா உபன்யஸித்து வரும் ப்ரபாஸ கண்டத்திலிது உளது.

ந-நி

குழந்தைகளுக்கு ஆரோக்ய உணவு
தாய்ப் பால் தான்.

பயஸ்யா

தாய்ப் பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயனம்
விலை ரூ, 2—4—0 தான்
தயாரிக்குமிடம்
ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்
தென்னூர்ரோடு, திருச்சினாப்பள்ளி
ஸ்தாபகர்
V. B. நடராஜ சாஸ்திரீ,
ஆயுர்வேதசார்ய (Regd.)

THE SANATANA DHARMA
OR
THE HINDU VIEW OF LIFE
BY
SRI SANKARACHARYA
of
SRI KANCHI KAMAKOTI PITHAM
Translated from the original in Tamil
BY
V. R. SUNDARARAMAN, M.A.
With a Foreword by
Sir MANMATHANATH MUKERJEE, Kt.
Ex-Chief Justice, High Court, Calcutta.
Price Rs. 1-8-0... Postage extra.
கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனார்தன அச்சுகூடம், லிமிடெட்., கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar and S, Kalyanasundaram.